**செய்தி வெளியீடு எண். 382** **நாள். 13.7.2009**

**பத்திரிக்கை செய்தி**

மருந்துகள் ஆய்வாளர்கள் 29.06.2009 அன்று ென்னை–11 திரு.வி.க. நகரில் உள்ள அஸ்டான்ஸ் பார்மாசியா என்ற மருந்து மொத்த வியாபார நிறுவனத்தை தணிக்கை செய்தனர். அதுசமயம் இமாச்சலபிரதேசம், சோலன் நகரில் உள்ள ரோமா பார்மா (பி) லிமிடெட் என்ற நிறுவனம் தயாரித்த ட்ரமாக்ஸ் (Tramax) என்ற ஊசி மருந்தினை மருத்துவர்களுக்கு மாதிரிகளாக தயாரித்துக் கொடுத்துள்ளது தெரியவந்தது. அஸ்டான்ஸ் பார்மாசியா என்ற நிறுவனம் அவற்றினை விற்பனைக்கு ஏற்றாற்போல் மாற்றி விற்பனை செய்ய ஏற்பாடு செய்துள்ளனர். மேலும் நுநெர்வ் பிளஸ் (NUNERVE PLUS) என்ற ஊசி மருந்து இமாச்சலபிரதேசத்தைச் சார்ந்த ரோமா பார்மா (பி) லிமிடெட் என்ற நிறுவனத்தால் விற்பனைக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை அஸ்டான்ஸ் பார்மாசியா என்ற மொத்த மருந்து வியாபார நிறுவனம் மருத்துவ மாதிரிகளாக மாற்றம் செய்து வைத்திருந்தனர்; மேலும் இமாச்சலபிரதேசத்தைச் சார்ந்த ரேடிகோ ரெமிடிஸ் தயாரித்த லெவசஸ்டின் (LEVASTIN) என்ற மாத்திரைகளில் உற்பத்தி விலை ரூ.23 என்பதை ரூ.45–ஆக மாற்றி விலைப்பட்டி அச்சிட்டு ஒட்டியுள்ளனர்.

மேற்கண்ட செயல்கள் அனைத்தும் மருந்துகள் மற்றும் அழகுச் சாதனப்பொருட்கள் சட்டம் 1940 மற்றும் மருந்துகள் விலைகட்டுப்பாடு ஆணை 1995 கீழ் விதிகளை மீறியதாகும். அதனால் மருந்து ஆய்வாளர்கள் அந்த மருந்துகளையும், காலி அட்டை பெட்டிகளையும், அஸ்டான்ஸ் பார்மாசியா நிறுவனத்திலிருந்து பறிமுதல் செய்துள்ளனர். மேலும் இது தொடர்பாக விரிவான புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

வி.கு. சுப்புராஜ், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர்,
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**